# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாந் தவணைப் பரீட்சை - 2023

| தரம் - 10 | விவசாயம் | நேரம் :- 3.00மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................

### பகுதி – I

**பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து கோடிடுக**

01. **மின்னேரியாத் தெய்வம்** என அழைக்கப்படும் மன்னன்?

1) மகாசேனன் 2) தேவநம்பியதீசன 3) பராக்கிரமபாகு 4) வசபன்

02. கலாவாவியில் இருந்து திஸாவாவிக்கு நீரைக் கொண்டு செல்ல உதவும் கால்வாய்.

1) மினிப்பே 2) கலா வாவி
3. யோதஅல கால்வாய். 4) மகாவலி

03. விவசாயிகளின் தோழன் என அழைக்கப்படும் மண்வாழ் அங்கி?

1) உழுவான் 2) கரப்பான 3) கறையான் 4) மண்புழு

04. பசுமைப் புரட்சி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

1) 1970 2) 1960 3) 1965 4) 2001

05. ஒளிச் செறிவு அளக்கும் உபகரணம் எது?

1) ஞாயிற்றுக் கதிர்ப்புமானி ‘2) ஞாயிற்று ஒளிர்வுமானி
3) அனிலமானி 4) ஈர உலர் குமிழ் வெப்பமானி

06. இலங்கையின் விவசாய சூழலியல் வலயங்கள் எத்தனை?

1) 26 2) 46 3) 44 4) 25

07. மத்தியநாட்டு உலர்வலயத்தைக் குறிக்கும் எழுத்துக்கள்?

1) WU 2) WM 3) DL 4) IM

08. பின்வருவனவற்றுள் நெடும் பகற் தாவரமாக அமையாதது எது?

1) கரட 2) மிளகாய் 3) முள்ளங்கி 4) வெங்காயம்

09. ஈரவலய மழைவீழ்ச்சி அளவைக் குறிப்பது?

1) 2500mm மேல் 2) 3500 mm மேல்
3) 1750 mm மேல் 4) 1950 mm மேல்

10. அடையற்பாறை ஆக அமையாதது?

1) குவாட்ஸ் 2) கிரனைற் 3) நைஸ் கல் 4) சுண்ணாம்புக்கல்

11. நீர் வெளியேற்றும் போது ஏற்படும் அழுத்தத்திலிருந்து குளக்கட்டை பாதுகாக்கும் அமைப்பு?

1) குளக்கட்டு 2) சுருங்கை 3) கலிங்கல்த்தொட்டி 4) அலைதாங்கி

12. **“சேற்றைக்கழுவிய விவசாயி நாடாளவும் உகந்தவன்”** எனக் கூறியவர்?

1) றொபட் நொக்ஸ் 2) றொபட் குக்
3) அலெக்ஸான்டர் 4) ஹென்றி

13. வடகீழ்பருவபெயர்ச்சி மழைக் காலத்தைக் குறிப்பது?

1) ஆகஸ்ட் - செப்ரெம்பர் 2) நவம்பர் - பெப்ரவரி

3) மார்ச் - ஏப்ரல் 4) டிசம்பர் - பெப்ரவரி

14. பின்வருவனவற்றுள் ஒளிக்கால துண்டற்பேறற்ற தாவரம் எது?

1) பீற்றூட், முள்ளங்கி 2) சலாது, வெங்காயம்

3. போஞ்சி, புதிய நெற்பேதங்கள் 4) புதிய நெற்பேதங்கள், வெங்காயம்

15. மேல்மண் அல்லது கழுவியகற்றப்படும் படை எது?

1) O படை 2) R படை 3) A படை 4) B படை

16. 0.002mm இலும் குறைந்த விட்டம் கொண்ட மண்

1) பெருமணல் 2) அடையல் 3) களி 4) பரல்

17. தாவரங்களால் அகத்துறிஞ்சப்படும் நீர் பின்வருவனவற்றுள் எது?

1) புவியீர்ப்பு நீர் 2) பருகு நீர் 3) மயிர்த்துளை நீர் 4) கசிவு நீர்

18. மண்ணின் **பௌதீக இயல்புகள் அல்லாதது?**

1) மண் இழையமைப்பு **2)** மண் கட்டமைப்பு

3) உயிரிகளின் நடவடிக்கைகள் 4) மண் ஆழம்

19. குளத்தின் எல்லை பகுதி. குளத்தின் மிகப்பிரதான கூறும் இதுவாகும்

1) அலைதாங்கி 2) சுருங்கை 3) கலிங்கல்த்தொட்டி 4) குளக்கட்டு

20. உணவுக் காப்பில் செல்வாக்குச்செலுத்தும் விடயம் அல்லாதது?

1) உணவின் அளவு 2) அணுகத்தகு ஆற்றல

3) உணவின் கிடைப்புத்தன்மை. 4) பயன்படுத்தல்.

21. **பௌதீக வானிலையால் அழிவதால்** செயற்பாடாக அமையாதது?

1) வெப்பநிலை மாற்றம் 2) நீர் உறைதல்

3) காபனீரொட்சைட்டு அளவு 4) ஓடும் நீரின் தாக்கம்

22. காற்றின் வேகத்தை அளக்கும் அலகு பின்வருவனவற்றுள் எது?

1) mm 2) km/h 3) ℃ 4) $\delta$

23. கடந்த 24 மணிநேரத்தில் பொலனறுவையில் 90அஅ மழைவீழ்ச்சி பெறப்பட்டது. இத்தரவு குறிப்பது.

1) வானிலை 2) காலநிலையும்

3) காலத்தரவு 4) வானிலையும் காலநிலையும்

24. வெப்பநிலையின் முக்கியமான செல்வாக்குகள்

1) நிலம் பண்படுத்தலுக்கு 2) பயிர் வளர்ச்சிக்கு

3) ஒளித்தொகுப்பிற்கு 4) காய்த்தலிற்கு

25. சாரீரப்பதனை அளக்க

1) ஈரமானி 2) ஈர உலர் குமிழ் வெப்பமான

3) மழை மானி 4) அனிலமானி

26. 26. இலங்கையில் தேயிலை தொடர்பான ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்

1) லுணுவில 2) தலவாக்கல்ல 3) மகாஇலுப்பள்ளம 4) அகலவத்தை

27. இலங்கையில் காலநிலையில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாக அமைவது

1) மழைவீழ்ச்சி 2) ஒளிச் செறிவு 3) வெப்பநிலை 4) சாரீரப்பதன்

28. மண்ணின் pH பெறுமானத்திற்கமைய pH 6.6-7.2 வரை கொண்ட மண் வகைகள

1) அமில மண் 2) கார மண் 3) நடுநிலை மண் 4) கடுங்கார மண்

29. மண்ணின் அமிலத்தன்மையை நீக்குவதற்கு

1) மண்ணுடன் கந்தகம் கலத்தல்

2) காரப்பதார்த்தங்கள் சேர்த்தல்

3) மண்ணுக்கு சேதனப்பொருட்கள் சேர்த்தல்

4) பாசன நீருடன் யேர்ஊழு$_3$ சேர்தல்

30. pH பெறுமானத்தை அளவிடும் முறையாக கொள்ளப்படுவது

1) வடிதாள் முறை 2) துளி முறை

3) ஆவியாக்கல் முறை 4) pH தாள் முலம்

31. இலங்கையில் எத்தனை வகையான மண் கட்டமைப்புக்கள் உள்ளன

1) 4 வகையான 2) 16 வகையான

3) 8 வகையான 4) 7 வகையான

32. எமது நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் அதிகளவு பங்களிப்புச் செய்யும் துறை

1) சேவைத் துறை 2) விவசாயத் துறை

3) வங்கித்துறை 4) கைத்தொழில் துறை

33. இலங்கையில் கோப்பி, தேயிலை, இறப்பர், சிங்கோனா, கொக்கோ, தென்னை போன்ற பெருந்தோட்டப்பயிர்கள் அறிமுகம் செய்யதவர்கள்

1) கிரேகர் 2) ஒல்லாந்தர் 3) இந்தியர் 4) பிரித்தானியர்

34. பாறைவகைகள் எத்தனை

1) 8 2) 4 3) 2 4) 3

35. மண்ணின் கூறுகளாக அமையாதது பின்வருவனவற்றுள் எது?

1) திண்மப்பதார்த்தம் 2) மணிணீர்

3) பிளாஸ்ரிக் 4) மண்ணங்கிகள்

36. மண்ணின் பக்கப்பார்வை உள்ள படைகள் எத்தனை

1) 6 2) 4 3) 8 4) 5

37. பேராதனை தாவரவியற் பூங்கா எப்போது நிறுவப்பட்டது.

1) 1822 2) 2007 3) 1999 4) 1940

38. அந்நியர் வருகையால் பண்டைய இலங்கையின் விவசாயத்தில் ஏற்பட்ட மாற்றம்

1) தன்னிறைவுப் பொருள்தாரம் வர்த்தகப்பொருளாதாரமாக மாற்றமடைந்தது.

2) விவசாய நீர்ப்பாசனத்திட்டங்கள் பல உருவாக்கப்பட்டமை

3) இணையத்தள வசதிகள் ஏற்பட்டமை

4) பராக்கிரம சமுத்திரம் அமைக்கப்பட்டமை.

39. சிறு ஏற்றுமதிப் பயிராக அமைவது

1) தேயிலை 2) தெங்கு 3) இறப்பர் 4) கறுவா

40. **வெல்லஸ்ஸ** என அழைக்கப்பட்ட மாகாணம்

1) ஊவா மாகாணம் 2) மத்திய மாகாணம்

3) வட மாகாணம் 4) தென் மாகாணம்

(40 x 1 = 40 புள்ளிகள்)

## பகுதி II

முதலாம் வினா உட்பட மொத்தமாக ஐந்து வினாக்களுக்கும் விடை தருக.

(01) 01. குளத்தின் பிரதான பாகங்கள் வரைந்து குறிக்குக?

02. பண்டையகாலத்தில் இலங்கையில் விவசாயம் நிலவியமைக்கான சான்றுகள் இரண்டு தருக?

03. பல்நோக்கு அபிவிருத்தித் திட்டங்கள் நான்கு தருக?

04. பல்நோக்கு அபிவிருத்தித் திட்டங்களின் நோக்கங்கள் நான்கு தருக?

05. இலங்கை அபிவிருத்தியில் விவசாயத்தின் வகிபாகம் இரண்டு தருக?

06. விவசாயத்தின் இரு பிரிவுகளையும் குறிப்பிடுக?

07. பசுமைப் புரட்சியால் விவசாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டு தருக?

08. பிரித்தானியர்களால் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட. பெருந்தோட்டப்பயிர்கள் எவை?

09. இலங்கையின் தற்போதைய விவசாயத்துறை நான்கு தருக?

10. வீட்டு வளவில் நாட்டக் கூடிய பயிர்கள் நான்கு தருக?

($10 \times 2 = 20$ புள்ளிகள்)

(02) 01. உணவுக் காப்பு என்றால் என்ன?

02. உணவுக் காப்பில் செல்வாக்குச்செலுத்தும் விடயங்கள் மூன்று தருக?

03. எமது நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் பங்களிப்புச் செய்யும் துறைகள் எவை?

04. இலங்கையில் விவசாயத்திற்குள்ள வாய்ப்புக்கள் மூன்று தருக?

(10 புள்ளிகள்)

(03) 01. வானிலை என்றால் என்ன?

02. பயிர்ச்செய்கையில் முக்கியத்துவம் பெறும் வானிலைக் காரணிகளும் அவற்றை அளக்கும் உபகரணங்களும் அட்டவணைப்படுத்துக?

03. பயிர்ச்செய்கையில் மண்ணின் பங்களிப்பு மூன்று தருக?

(10 புள்ளிகள்)

(04) 01. மண்ணரிப்பு என்றால் என்ன?

02. மண்ணரிப்பின் பாதகமான விளைவுகள் நான்கு தருக?

03. மண்ணரிப்பைக் குறைக்க மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் நான்கு தருக?


(10 புள்ளிகள;)

(05) 01. மண்ணின் கூறுகள் எவை??

02. மண் உருவாதல் செயன்முறையின் படிமுறையை பாச்சற்கோட்டுப் படம் மூலம் காட்டுக.

03. i. கீழே தரப்பட்ட உருவை இனங்காண்க?

ii. 1,2,3,4 ஆகியவற்றைப் பெயரிடுக?




(06) 01. மண்ணிற்கு சேதனப் பொருள் இடுவதன் முக்கியத்துவங்கள் மூன்று தருக?

02. எளியமழை மானியின் படத்தைவரைந்து குறிப்பிடுக?

03. மழை மானியை நிறுவும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் மூன்று தருக?

(07) 01. விவசாயம் என்றால் என்ன?

02. பிரித்தானியர்களால் அறிமுகம் செய்யப்பட்ட பயிர்கள் நான்கு தருக?

03. மனித யுகங்கள் எத்தனை, அவை எவை?

04. இலங்கையில் மழை வீழ்ச்சியை அடிப்படையாகக் கொண்ட காலநிலை வலயங்கள் எத்தனை? அவை எவை?